# சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் பொருளாதார மற்றும் சமூகப் பங்களிப்பு : சண்டிலிப்பாய் பிரதேசத்தை மையமாகக் கொண்ட ஆய்வு

**அ.அருள்வபில்ராஜ்[1], சி.விஜயகுமார்[2]**

*[1,2] பொருளியற்துறை, யாழ் பல்கலைக்கழகம், இலங்கை*
*[1]aarulvapilraj6@gmail.com & [2]vijai114@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்.**

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் பொருளாதார மற்றும் சமூக பங்களிப்பு எனும் ஆய்வானது சண்டிலிப்பாய் பிரதேசத்தினை மையமாகக் கொண்டது. இங்கு 58 சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகள் எழுமாற்றாக தெரிவு செய்யப்பட்டு அங்கு தொழில் புரியும் 84 தொழிலாளர்களையும் ஆய்வுக்குட்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வு நோக்கமாக சிறிய நடுத்தர தெரழில் முயற்சிகளின் செயற்பாட்டின் மூலம் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் அதிகரிக்கின்றதா? மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட சமூகப் பொறுப்புடன் செயற்படுகின்றன என்பது பற்றியதாகும். இந்த ஆய்வானது பண்பு சார் மற்றும் அளவு சார் அணுகுமுறைகளைக் கொண்டமைந்தும் பகுப்பாய்வுக் கருவிகளாக பிற்செலவு அணுகுமுறைகளைக் கொண்டும் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒரு விபரண ரீதியான ஆய்வாக் காணப்படுகின்றது. உரிமையாளர்களிடமும், தொழிலாளாகளிடமும் ஒழுங்கமைக்கப்பட்ட வினாக் கொத்துக்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளை பாகுப்பாய்வு செய்து முடிவுகள் பெறப்பட்டுள்ளன. சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளின் பொருளாதார, சமூக செயற்பாடானது தொழிலாளர்களின் வாழ்க்கைதரத்தினை அதிகரிக்கச் செய்கின்றது. பிற்செலவு பகுப்பாய்வில் $R^2$=0.698 என்பது தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தினை அதிகரிப்பதில் சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளானது 70% மாகச் செல்வாக்கு செலுத்துகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இங்கு தொழில் முயற்சி நிறுவனங்கள் ஒன்றிணைக்கப்பட்ட சமூகப் பொறுப்பு (Cooperate Social Responsibility - CSR) செயற்பாடுகளை 77% மேற்கொள்கின்றது. இங்கு தொழிலாளர்கள் மட்டிலான ஒன்றிணைக்கப்பட்ட சமூகப் பொறுப்பு செயற்பாடுகளை அதிகமாகச் செய்து வருவதுடன் சமூக சேவைகளை 40% மான நிறுவனங்கள் செய்து வருகின்றன. மேலும் சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளானது தொடர்ச்சியான வளர்ச்சிப்போக்கினைக் கொண்டுள்ளன இந்த வளர்ச்சிற்கு நிறுவனங்களின் வருமானம் 60.5% மாகவும், தேறிய மூலதனத்தில் ஏற்படும் அதிகரிப்பு 45.2% மாகவும் செல்வாக்கு செலுத்துவதுடன் நிறுவனத்தின் பாதகமான காரணிகளின் செல்வாக்கு 17% மாக எதிர்கணியத்தில் செலவாக்கு செலுத்துகின்றன.

**பிரதான சொற்கள்:** சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள், வாழ்க்கைத்தரம், ஒன்றிணைக்கப்பட்ட சமூகப் பொறுப்பு, வறுமை, வருமான சமமின்மை

## 1 ஆய்வுப் பின்னணியும், அறிமுகமும்

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு வறுமை, வருமான சமமின்மை, வேலையின்மை போன்ற பல்வேறு காரணிகள் தடையாகக் காணப்படுகின்றன. இத்தடைகள் களைந்தெடுக்கப்படும் சந்தர்ப்பத்திலேயே குறிப்பிட்ட நாட்டில் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட முடியும். பொதுவாக வளர்முக நாடுகளில் இப் பிரச்சினை மிகப் பாரியளவில் காணப்படுகின்றது. கைத்தொழில் மயமாக்கமானது ஒரு நாட்டின் வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் துரிதமாக ஏற்படுத்தும் ஓர் இயந்திரமாகும். ஆற்றல் வாய்ந்த கைத்தொழில் துறையானது பொருளாதார நடவடிக்கைகளின் அதிகரிப்பிற்கு வழிவகுப்பதுடன் நாட்டின் நவீன மயமாக்கத்திற்கும் நுட்பத்தேர்ச்சி வாய்ந்த வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் வழிவகுக்கும். கைத்தொழில் துறையானது விவசாயத் துறையினை விட பல சாதகமான அம்சங்களைக்



ISBN 978-955-627-120-1

கொண்டுள்ளது. கைத்தொழில் துறையானது வருமானம், வேலைவாய்ப்பு, உற்பத்தி, பொருளாதார வளர்ச்சி, வறுமைத் தணிப்பு போன்றவற்றில் தாக்கம் செலுத்துகின்றது. தொழில் முயற்சி என்பதனுள் சிறியளவான தொழில் முயற்சி, நடுத்தரவளவான தொழில் முயற்சி, பாரியளவான தொழில் முயற்சி என வகைப்பாடுகள் காணப்படுகின்ற போதிலும் இங்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது சிறிய நடுத்தரவளவான தொழில் முயற்சிகள் தொடர்பாகவே ஆகும்.

சொத்துக்களின் பெறுமதி, தொழிலாளர்களின் எண்ணிக்கை, மூலதனத்தின் அளவு, வருமானம், உற்பத்தி என்பவற்றின் அடிப்படையில் சிறிய, நடுத்தர தொழில், முயற்சிகள் வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தவகையில் இலங்கை தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களமானது 10 பேருக்குட்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட தொழில் முயற்சி சிறு தொழில் எனவும், 10-90 பேருக்குட்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட தொழில் முயற்சி நடுத்தர தொழில் முயற்சி என வகைப்படுத்தியுள்ளது. (Satharasinghe 2015) சிறு கைத்தொழில் திணைக்களமானது 5 மில்லியனுக்குட்பட்ட மூலதனத்தினையும் 50 தொழிலாளர்களையும் கொண்டவை சிறு கைத்தொழில் எனவும் 5-25 மில்லியனுக்குட்பட்ட மூலதனத்தினையும் 50 -100 தொழிலாளர்களையும் கொண்டவை நடுத்தரவளவான கைத்தொழில் எனவும் வகைபடுத்தப்பட்டுள்ளன (Dasanayake 2010).

சண்டிலிப்பாய் பிரதேசமானது விவாசய நிலங்கள், கடல் வளம், பனை வளம், நன்னீர் வளம் என பல இயற்கை அம்சங்களைக் கொண்டுள்ளது. இங்கு விவசாயமே அடிப்படை ஆகும். இங்கு 49% மான மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளனர். (சண்டிலிப்பாய் பிரதேச செயலக அறிக்கை 2015) இங்கு அரச தொழில், விவசாயம், மீன்பிடி, தனியார் தொழில் என்பவற்றில் ஈடுபடுகின்றனர். இங்கு தொழில் முயற்சியானது வர்த்தகம், உற்பத்தி, சந்தைப்படுத்தல், சுயதொழில் என பல காணப்படுகின்றது. சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குள் செயற்படுகின்ற சிறிய நடுத்தர தொழில் முயற்சிகள் மூலதனம், தொழிலாளர்களின் எண்ணிக்கை என்பவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. 5-15 இலட்சத்திற்கு உட்பட்டதும் 5-7 வரையான தொழிலாளர்களைக் கொண்டவை சிறிய தொழில் முயற்சி எனவும் 20 இலட்சத்திற்குட்பட்ட மூலதனத்தைக் கொண்டதும் 25 தொழிலாளர்களைக் கொண்டிருப்பின் அவை நடுத்தர தொழில் முயற்சி என வகைப்படுத்தப்பட்டுள்ளன (சண்டிலிப்பாய் பிரதேச செயலக அறிக்கை 2015).

### 1.2 ஆய்வின் நோக்கம்

- சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளின் செயற்பாட்டின் மூலம் அங்கு தொழில் புரியும் ஊழியர்களின் வாழ்க்கைத்தரம் அதிகரித்துள்ளதா? என்பதை கண்டறிதல்.
- நிறுவனங்களின் ஒன்றிணைக்கப்பட்ட சமூகப் பொறுப்பு (Co-operate Social Responsibility - CSR) பற்றி அறிதல்.
- சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளின் செயற்பாட்டின் மூலம் பிரதேச ரீதியான அபிவிருத்தி ஏற்பட்டுள்ளமை பற்றி அறிந்தல்.

### 2.0 முன்னர் செய்யப்பட்ட ஆய்வுகளின் மீளாய்வு

Vijayakumar (2013) என்பவரின் ஆய்வானது இலங்கையின் பொருளாதார வளர்ச்சி, வறுமை மற்றும் சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளின் செயற்பாடு என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு இரண்டாம் நிலை தரவுகளைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இந்த ஆய்வின் நோக்கம் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் செயற்பாட்டிற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும்



ISBN 978-955-627-120-1

இடையில் நேர்கணியத் தொடர்பு காணப்படுகின்றதா? என்பதைக் கண்டறிவதாகும். இவ் ஆய்வின் முடிவானது. சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளது (SMEs) செயற்பாட்டிற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் இடையிலான இணைவு குணகம் (Co-Effcient) 0.02 ஆக நேர்கணியத் தொடர்பினை காட்டுகின்றது. ஆனால் இலங்கையில் சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளானது பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடக் கூடிய தாக்கத்தினை செலுத்தவில்லை என்பதனைக் குறிப்பிடுகின்றர். Satharasinghe (2015) என்பவர் இலங்கையில் பிரதேச செயலகத்தினுள் மேற்கொள்ளப்படுகின்ற தொழில் முயற்சிகளில் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது அதன் படி 45% ஆடை நுண் தொழில் முயற்சிகளாகும். அவற்றில் 10% பதிவு செய்யப்படாதவையாகும். மேலும் இலங்கையில் சராசரியாக 42% மான நிறுவனங்கள் பதிவு செய்யப்படாமல் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்கின்றன. இதில் 25% மான தொழில் முயற்சிகள் பெண்கள் தலைமையில் இடம் பெறுகின்றன என்பதை புள்ளி விபர ஆதாரத்துடன் தொகை மதிப்பு புள்ளி விபரத் திணைக்களத்தின் இயக்குனர் செய்தியில் வெளியிட்டுள்ளார்.

Lalitha Fernando (2000) என்பவர் தனது கட்டுரையில் என்பவரின் ஆய்வானது தொழில் முயற்சிகளை ஊழியர்களின் எண்ணிக்கை, தேவையான சொத்துக்களின் அளவு, செலவுகள், மின்சார உபயோகம் என்பவற்றின் அடிப்படையில் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை வகைப்படுத்த முடியும் எனவும் ஓர் சிறிய தொழில் முயற்சி ஒன்றை ஆரம்பிக்கும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய அம்சங்களாக என்ன வகையான தொழில் முயற்சி, தேவையான ஊழியம், மூலப் பொருட்கள், நிதி, தொழில்நுட்பம் என்பன தொழில் முயற்சியில் தாக்கம் செலுத்துகின்றது என்பதைக் கண்டறிவதாக அமைகின்றது. Gamage (2003) SMEs குறைந்த முதலீட்டில் உருவாக்கப்படுவதால் சமூகப் பொருளாதாரத்தில் பல நன்மைகளை வழங்குகின்றது. வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கு வழிவகுப்பதுடன் SMEs குறைந்த உள்ளார்ந்த ரீதியில் வளங்களைத் திரட்டவும் குறைந்த நிதியியல் முறைமையில் முதலிடவும் இந்த கிராமிய சிறிய நடுத்தர கைத்தொழில் முயற்சிகள் உதவுகின்றன. SMEs பிராந்திய அபிவிருத்திக்கும் வறுமையைத் தணிப்பதற்கும் உதவுகின்றன. Priyanth (2006) என்பவர் சிறிய, நடுத்தர தொழில் முயற்சி நிறுவனங்கள் எதிர்காலம் தொடர்பான அபிவிருத்தி திட்டங்கள், உற்பத்தி செயற்பாடு, சந்தைப்படுத்தல், நிதிச் சந்தை செயற்பாடுகள் என்பன தொடர்பான வரையறைகள் சிறிய நடுத்தர தொழில் முயற்சி நிறுவனங்கள் வளர்ச்சியடைவதற்கும் அபிவிருத்தியடைவதற்கும் மிக முக்கியமாவை என்பதனை ஆய்வு செய்துள்ளர்.

Vijayakumar (2013) யுத்தத்தின் பின்னர் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளானது மிக குறைந்தளவான வளர்ச்சியை அடைந்து வருகின்றது. இவ் ஆய்வில் யுத்தத்தின் பின்னர் யாழ்மாவட்டத்தில் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளானது எதிர்நோக்கும் பிரச்சினைகள் அவற்றின் வளர்ச்சி போக்குகள் பற்றியும் நோக்கப்படுகின்றது. மேலும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தின் பின்னர் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகள் மீது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் என்பன மேற்கொள்ளப்படுகின்றது என குறிப்பிடுகின்றார். Fauzul, Hirpsumi and Tanaka (2010) சிறிய, நடுத்தர கைத்தொழில் முயற்சி நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் உள்ளக, வெளியக வலையமைப்புக்கள், கல்வி நிறுவனங்கள், தொழில்நுட்ப கல்லூரிகள், நிதியியல் நிறுவனங்கள், ஏனைய நிறுவனங்களுக்கிடையான இடைத்தொடர்புகள், மனித வளங்கள் என்பன முக்கியமானதாகும். இவ் ஆய்வின் முடிவானது ஆய்வின் நோக்கத்தின் நேர்க்கணிய பெறுமதியைக் கொண்டிருக்கின்றது.

Thevarajah (2015) சிறிய நடுத்தர வரத்தகம் தோல்வி அடைவதற்கு போதிய திட்டமிடல் இன்மை, போதிய தொழில்நுட்பம் இன்மை, வசதி வாய்ப்புக்கள் உள்ள



ISBN 978-955-627-120-1

சரியான இடத்தெரிவின்மை, சிறந்த ஊழியத் தெரிவின்மை, வாடிக்கையாளர் மீதான உறவு முறையாக இன்மை, போதிய வரவு செலவுத்திட்ட முகாமைத்துவமின்மை, உயர் அளவான வியாபார ஆபத்து, தலைமைத்துவம் இன்மை, தகுந்த சந்தைப்படுத்தல் இன்மை, போதிய நேரம் செலவழிக்காமை, தகுந்த முயற்சியான்மைத் திறன் கொண்டிருக்காமை என்பன அதிகளவான சிறிய நடுத்தர கைத்தொழில்கள் தோற்றுப்போக காரணமாக அமைகின்றது Mayuran (2016) வாடிக்கையாளர் மீதான அக்கறை, தரத்தை பேணுதல், சந்தை முகாமைத்துவம், நிதியியல் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிகள் சிறுதொழில் முயற்சிகளின் செயற்திறனில் 85.5% செல்வாக்கு செலுத்துகின்றது எனவும் இந்த பயிற்சி திட்டங்கள் மிக பயனுள்ளது என அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர் எனக் குறிப்பிடுகின்றர்.

### 3. ஆய்வு முறையியல்

முதலாம் நிலைத்தரவுகளாக வினாக்கொத்து வடிவில் சண்டிலிப்பாய் பிரதேசத்தில் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்ற முயற்சியாளர்களிடமும் அங்கு தொழில் புரியும் தொழிலாளர்களிடமும் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. வினாக்கொத்து திறந்த வினாக்களை உடையதாகவும் அமைந்துள்ளது. வினாக்கொத்து (Liker Scale System) இல் அமைக்கப்பட்டு முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை, ஓரளவு ஏற்றுக் கொள்கிறேன், ஏற்றுக் கொள்கிறேன், முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன் எனும் ஒழுங்கு முறையில் தமது சரியான தெரிவினை தெரிவு செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகள் என்பன ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வுகள், ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள், மத்திய வங்கி ஆண்டறிக்கைகள், என்பவற்றிலிருந்து பெறப்பட்ட தரவுகளாக காணப்படுகின்றன. இவ் ஆய்வுக்கு தேவையான புள்ளிவிபரங்கள் மற்றும் முறைசார் தகவல்கள் என்பன சண்டிலிப்பாய் பிரதேச செயலக புள்ளிவிபரவியல் அறிக்கைகள் (Resource Profile 2015), ஆய்வுக்கட்டுரைகள், புத்தகங்கள், இணையத்தளங்கள் போன்ற இரண்டாம் நிலைத்தரவுகளாக பெறப்பட்டவையாகும்.

மாதிரி எடுப்பானது சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 580 சிறிய,நடுத்தர தொழில் முயற்சிகளில் 10% என்றதன் அடிப்படையில் 58 தொழில் முயற்சிகளை எளிய எழுமாற்றாகத் தெரிவு செய்யப்பட்டு அவற்றின் உரிமையாளர்களுக்கும் அவற்றில் பணிபுரிகின்ற ஊழியர்களுக்கும் கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்துகள் வழங்கி தகவல் திரட்டப்படுகின்றது.

## 4. தரவுப்பகுப்பாய்வு

### 4.1 நிறுவனங்களின் பருமன்

**அட்டவணை 01**

| | Frequency | Percent |
|---|---|---|
| சிறு தொழில் முயற்சி | 40 | 69.0 |
| நடுத்தரமான தொழில் முயற்சி | 18 | 31.0 |
| மொத்தம் | 58 | 100.0 |

*(மூலம் : களஆய்வு 2017)*

இந்த ஆய்விற்கு உட்படுத்திய 58 நிறுவனங்களில் 40 (69%) தொழில் முயற்சிகள் சிறு தொழில் முயற்சி ஆகவும் 18 (31%) தொழில் முயற்சிகள்



ISBN 978-955-627-120-1

நடுத்தரமான தொழில் முயற்சியாகவும் காணப்படுகின்றது. சில பல்பொருள் வணிக நிலையங்கள், வன்பொருள் விற்பனை நிலையங்கள், கட்டிடப் பொருட்கள் விற்பனை நிலையம், கடல் உணவு உற்பத்தி நிலையங்கள், உப உணவு உற்பததி நிலையங்கள் என்பன நடுத்தரமான தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்றன.

**4.2 பால்நிலை ரீதியான பங்குபற்றல் வீதம்**

**அட்டவணை 02**

| | உரிமையாளர்கள் | | தொழிலாளர்கள் | |
|---|---|---|---|---|
| | Frequency | percent | Frequency | percent |
| ஆண்கள் | 46 | 79.3 | 51 | 60.7 |
| பெண்கள் | 12 | 20.7 | 33 | 39.3 |
| மொத்தம் | 58 | 100.0 | 84 | 100.0 |

*(மூலம் : களஆய்வு 2017)*

இப்பிரதேசத்தில் சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளில் ஈடுபடும் முயற்சியாளர்கள் மற்றும் அங்கு பணிபுரியும் தொழிலாளர்களில் பெரும்பாண்மையினர் ஆண்களாகும். இங்கு முயற்சியாளர்களில் ஆண்கள் 79% மாகவும் பெண்கள் 21% மாகவும் காணப்படுகின்றனர். அத்துடன் தொழிலாளர்களின் பால்நிலை ரீதியான பங்களிப்பினை நோக்கின் ஆண்கள் 61% மாகவும் பெண்கள் 39% மாகவும் காணப்படுகின்றது.

**4.3 கல்வி நிலை**

சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்ற முயற்சியாளர் மற்றும் அங்கு பணிபுரிகின்ற தொழிலாளர்களின் கல்வி நிலையினை நோக்கும் போது 67% மான தொழில் முயற்சியாளர்கள் சாதாரண தரத்துடனே காணப்படுவதுடன் தொழில் முயற்சி தொடர்பான தொழிற் கல்வியை பெற்றிருப்பவர் 15% மானோர் மட்டுமே ஆகும். உயர்தரக் கல்வியை பெற்ற முயற்சியாளர்களின் தொழில் முயற்சியானது கடந்த சில வருடங்களிற்கு முன் உருவாக்கப்பட்டவை ஆகும். மேலும் இங்கு தொழில் புரியும் ஊழியர்களின் கல்வி நிலையை நோக்கின் சாதாரண தரத்துடனான கல்வி பெற்றிருப்போரே (69%)அதிகமாக உள்ளனர். இங்கு தொழில் பயிற்சி பெற்ற முயற்சியாளர்கள் என நோக்கின் பதிப்பகம், தையல், தொலைபேசி திருத்தகம் என்பவற்றில் உள்ளவர்களாகும்.

## 4.4 கருதுகோள் பரிசீலனை

**H1- சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளில் தொழில் புரியும் ஊழியர்களின் வாழ்க்கைத்தரம் அதிகரிக்கின்றது.**

**மாதிரி 01**

$$LIS = A+\beta_1 SAL+\beta_2 SAV+\beta_3 CSR+ \beta_4 RE.D+ U$$

இம் மாதிரியில் LIS என்பது தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தினையும், SAL என்பது தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தின் அளவினையும், SAV தொழிலாளர்களது சேமிப்பின் அளவினையும், CSR என்பது நிறுவனங்களின்



ISBN 978-955-627-120-1

ஒன்றிணைக்கப்பட்ட சமூகப் பொறுப்புகளினையும், RE.D என்பது பிரதேச அபிவிருத்தியினையும் U என்பது ஏனைய காரணிகளினையும் குறித்து நிற்கின்றது.

இம் மாதிரியானது தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தின் அளவு, சேமிப்பின் அளவு, நிறுவனங்களால் வழங்கப்படும் CSR மற்றும் பிரதேச அபிவிருத்தி என்பன தொழிலாளர்களின் வாழ்கைத்தரத்தில் நேர்கணியத்தில் செல்வாக்கு செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது இக்காரணிகளினை அதிகரிக்கும் போது தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் அதிகரிக்கும் என்பதைக் காட்டுகின்றது. இந்த மாதிரியானது பிற்செலவு பகுப்பாய்வு மூலம் நிருபிக்கப்படுகின்றது.

**அட்டவணை 03**

**Model Summary**

| Model | R | R Square | Adjusted R Square | Std. Error of the Estimate |
|---|---|---|---|---|
| 1 | .835[a] | .698 | .682 | .66780 |

*(மூலம் : களஆய்வு 2017)*

இங்கு பிற்செலவு மாதிரியில் $R^2$ =0.698 ஆகும். இதன் கருத்து என்னவெனின் தொழிலாளர்களின் வாழ்க்கை தரத்தினை அதிகரிப்பதில் சிறிய, நடுத்தர நிறுவனங்களின் பொருளாதார, சமூக செயற்பாடானது 70% (69.8%) செல்வாக்கு செலுத்துகின்றது என்பதைக் காட்டுகின்றது.

$$LIS= 2.374+0.049SAL+0.109SAV+0.029CSR+ 0.808RE.D+ U$$

இங்கு தொழிலாளர்களுக்கு வழஙகப்படும் சம்பளத்தில் 1% மாற்றமானது தொழிலாளர்களின் வாழ்கைத்தரத்தில் 4.9% மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. அதேபோல் தொழிலாளர்களின் சேமிப்பு அளவில் ஏற்படும் 1% மாற்றமானது வாழ்ககைத்தரத்தில் 10.9% மாக மாற்றத்தினை ஏற்படுத்தியிருப்பதுடன் ஒன்றிணைக்கப்பட்ட சமூகப் பொறுப்பில் ஏற்படும் 1% மாற்றமானது தொழிலாளர்களின் வாழ்ககைத்தரத்தில் 2.9% மாக மற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. மேலும் நிறுவனங்களின் செயற்பாட்டின் மூலம் ஏற்படும் பிரதேச அபிவிருத்தியில் ஏற்படும் 1% மாற்றமானது வாழ்க்கைத்தரத்தில் 80.8% மாற்றத்தினை ஏற்படுத்தியிருப்பதனை இம் மாதிரியானது காட்டுகின்றது.

**H2 நிறுவனங்கள் ஒன்றிணைக்கப்பட்ட சமூகப் பொறுப்புடன் செயற்படுகின்றன.**

இங்கு சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகள் ஒன்றிணைக்கப்பட்ட சமூக பொறுப்பு பற்றிய அறிவானது மிகக் குறைவாகவே உள்ளது. இப்பிரதேசத்தில் செயற்படுகின்ற தொழில் முயற்சிகள் நிறுவனங்களின் சமூகப் பொறுப்புக்கள் பற்றி 26% மான நிறுவனங்கள் எவ்விதமான அறிவும் கொண்டிருக்கவில்லை. 64% மான தொழில் முயற்சிகள் ஓரளவு CSR பற்றி அறிந்துள்ளன.

## மாதிரி 02

$$CSR = A+\beta_1HCF+\beta_2WFR+\beta_3PG+ \beta_4INF+ \beta_5CR+ \beta_6PT+ U$$

இம் மாதிரியில் CSR என்பது ஒன்றிணைக்கப்பட்ட சமூகப் பொறுப்பினையும், HCF என்பது தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சுகாதார வசதியினையும், WFR என்பது வேலைகளைச் சுதந்திரமாக செய்யும் சூழலையும், PG என்பது தொழில் உத்தரவாதத்தினையும், INT என்பது வாடிக்கையாளர்களுக்கு தகவல் வழங்குதலினையும், CR என்பது வாடிக்கையாளர்களுக்கு மதிப்பளித்தலினையும், PT என்பது பயிற்சி வழங்குதலினையும் விபரிக்கின்றது.



ISBN 978-955-627-120-1

இம் மாதிரியானது CSR செயற்பாட்டில் தொழிலாளர்களுக்கான சுகாதார வசதிகள், வேலைச் சுதந்திரம், தொழில் உத்தரவாதம், வாடிக்கையாளர்களுக்கான தகவல், வாடிக்கையாளுக்கு மதிப்பளித்தல், தொழில் பயிற்சி வழங்குதல் போன்ற காரணிகள் நேர்கணியத்தில் செல்வாக்கு செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இம் மாதிரியினை பிற்செலவு பகுப்பாய்வு மூலம் நிரூபிக்கப்படுகின்றது.

**அட்டவணை 05**

**Model Summary**

| Model | R | R Square | Adjusted R Square | Std. Error of the Estimate |
|---|---|---|---|---|
| 1 | .881[a] | .777 | .756 | 1.30351 |

*(மூலம் : களஆய்வு 2017)*

இங்கு பிற்செலவு மாதிரியில் $R^2 = 0.777$ ஆகும். இதன் கருத்து என்னவெனின் சிறிய, நடுத்தர நிறுவனங்கள் 78% (77.7%) கூட்டிணைக்கப்பட்ட சமூகப் பொறுப்புடன் செயற்படுகின்றன என்பதைக் காட்டுகின்றது. CSR சேவைகள் நல்ல அடைவு மட்டத்தை வெளிப்படுத்துகின்றன. இங்கு P பெறுதியானது (sig.) 0.05க்கு குறைவாகக் காணப்படுகின்றது

$$CSR = 6.693 + 0.438HCF + 0.336WFR + 0.442PG + 0.268INF + 0.130CR + 0.164PT + U$$

இங்கு தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சுகாதார வசதியில் ஏற்படும் 1% மாற்றமானது ஒன்றிணைக்கப்பட்ட சமூகப் பொறுப்பில் 43.8% மாக மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. அதேபோல் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் வேலை சுதந்திரத்தில் ஏற்படும் 1% மாற்றமானது ஒன்றிணைக்கப்பட்ட சமூகப் பொறுப்பில் 33.6% மாக மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் வழங்கப்படும் தொழில் உத்தரவாதத்தில் ஏற்படும் 1% மாற்றமானது ஒன்றிணைக்கப்பட்ட சமூகப் பொறுப்பில் 44.2% மாக மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் தகவல் மற்றும் மதிப்பு என்பவற்றில் ஏற்படும் 1% மாற்றமானது ஒன்றிணைக்கப்பட்ட சமூகப் பொறுப்பில் 26.8% மற்றும் 13% என மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. மேலும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் தொழில் பயிற்சி அளவில் ஏற்படும் 1% மாற்றமானது ஒன்றிணைக்கப்பட்ட சமூகப் பொறுப்பில் 16.4% மாக மாற்றத்தினை ஏற்படுத்தியிருப்பதனை இம் மாதிரி காட்டுகின்றது.

இங்கு பிற்செலவு பகுப்பாய்வின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட மாதிரியின் எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளைத் தந்துள்ளது. அதாவது நிறுவனம் தனது ஊழியர்களுக்கு வழங்கும் சுகாதார சேவைக்கும் (HCF) CSR இற்கும் இடையில் காணப்படுகின்றது எனவும், தொழில் சுதந்தரத்திற்கும் (WFR) CSR இற்கும் இடையில் நேர்கணியத் தொடர்பு காணப்படுகின்றது எனவும், தொழில் உத்தரவாதத்திற்கும் (PG) CSRற்கும் இடையில் நேர்கணியத் தொடர்பு காணப்படுகின்றது எனவும் தகவல் வழங்குவதற்கும் (INF) CSRற்கும் இடையில் நேர்கணியத் தொடர்பு காணப்படுகின்றது எனவும், வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் மதிப்பிற்கும் (CR) CSRற்கும் இடையில் நேர்கணியத் தொடர்பு காணப்படுகின்றது எனவும், தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிக்கும் (PT) CSRற்கும் இடையில் நேர்கணியத் தொடர்பு காணப்படுகின்றது எனவும் காட்டுகின்றது.

**H3 சிறிய, நடுத்தர நிறுவனங்கள் தொடர்சியான வளர்ச்சி போக்கினை கொண்டுள்ளன.**



ISBN 978-955-627-120-1

**மாதிரி 03 GR= A+β$_1$CM+β$_2$RLA+β$_3$NCA+ β$_4$INC+ β$_5$GH- β$_6$BAR+U**

இம் மாதிரியில் GR என்பது சிறிய, நடுத்தர முயற்சிகளின் வளர்ச்சிப் போக்கினையும், CM என்பது நிறுவன முகாமைத்துவம், RLA என்பது தொழிலாளர்களின் தொடர்ச்சியான வருகை, NCA என்பது தேறிய மூலதனங்களின் அதிகரிப்பு, INC என்பது வருமானம், GH என்பது அரச உதவிகள், BAR என்பது நிறுவனத்தின் வளர்ச்சிக்கு தடையான காரணிகள் போன்றவற்றினை விபரிக்கின்றது.

இம்மாதிரியானது நிறுவனம் தொடர்ச்சியான வளர்ச்சிப் போக்கில் முகாமைத்துவம், தொழிலாளர்களின் தொடர்ச்சியான வருகை, தேறிய மூலதனம், வருமானம் மற்றும் அரச உதவிகள் என்பன நேர்கணியத்திலும் தடைகள் எதிர்கணியத்திலும் செல்வாக்கு செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது முகாமைத்துவம், தொழிலாளர்களின் வருகை, தேறிய மூலதனம், வருமானம் மற்றும் அரச உதவிகள் என்பன அதிகரிக்கும் போது நிறுவனத்தின் வளர்ச்சி தூண்டப்படும் எனவும் நிறுவனத்தின் தடைகளின் செல்வாக்கு அதிகரிக்கும் போது வளர்ச்சி தடைப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனை பிற்செலவு பகுப்பாய்வின் மூலம் நிரூபிக்கப்படுகின்றது.

**அட்டவணை 06**

**Model Summary**

| Model | R | R Square | Adjusted R Square | Std. Error of the Estimate |
|---|---|---|---|---|
| 1 | .949[a] | .901 | .887 | .60997 |

a. Predictors: (Constant),

*(மூலம் : களஆய்வு 2017)*

இங்கு சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளின் தொடர்ச்சியான வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளின் தொடர்பினைக் பிற்செலவு மாதிரியில் R பெறுமதியானது மாறிகளுக்கிடையிலான எளிய இணைவுக் குணகத்தினைக் (0.949) காட்டுகின்றது. இது உயர் அளவான இணைவினைக் காட்டுகின்றது. $R^2$ பெறுமதியானது (0.901) சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளின் வளர்ச்சியில் எவ்வளவு வீதம் தாக்கம் செலுத்துகின்றது என்பதைக் காட்டுகின்றது. இந்த வகையில் SMEs வளர்ச்சியில் 90% மாக உயர் அளவில் தாக்கம் செலுத்துகின்றன.

$$Y= 0.165+0.081CM+0.045RLA+0.452NCA+ 0.605INC+0.046GH-0.123BAR+ U$$

இம் மாதிரியில் நிறுவன முகாமைத்துவத்தில் ஏற்படும் 1% மாற்றமானது நிறுவனத்தின் வளர்ச்சியில் 8.1% மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. அதேபோல் தொழிலாளர் வருகையில் ஏற்படும் 1% மாற்றமானது நிறுவனத்தின் வளர்ச்சிப் போக்கில் 4.5% மாற்றத்தினை ஏற்படுத்தியிருப்பதுடன் நிறுவனத்தின் தேறிய மூலதனத்தில் ஏற்படும் 1% மாற்றமானது சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளின் வளர்ச்சியில் 45.2% மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. மேலும் வருமானத்தில் ஏற்படும் 1% மாற்றம் சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளின் வளர்ச்சியில் 60.5% மான மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் அரச உதவிகளில் ஏற்படும் 1% மாற்றமானது சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளின வளர்ச்சிப் போக்கில் 4.6% மான மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. இந்த மாற்றங்கள் நேர்க்கணியத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆனால் நிறுவனத்தில் ஏற்படும் தடைகளில் ஏற்படும் 1% மாற்றமானது சிறிய, நடுத்தர



ISBN 978-955-627-120-1

தொழில் முயற்சிகளின SME இன் வளர்ச்சிப் போக்கில் எதிர்க்கணியத்தில் 12.3% மாக மாற்றத்தினை ஏற்படுத்தியிருப்பதனைக் காட்டுகின்றது.

**5. முடிவுரைகளும் பரிந்துரைகளும்**

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் பொருளாதார மற்றும் சமூக பங்களிப்பு என்ற ஆய்வானது சண்டிலிப்பாய் பிரதேசத்தில் தொழிற்படுகின்ற சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளினை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு தொழிற்படுகின்ற 58 சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளை எழுமாற்றாக தெரிவு செய்யப்பட்டு உரிமையாளர்களுக்கும் அங்கு பணிபுரியும் 84 தொழிலாளர்களுக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்யப்பட்டு கிடைக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் விபரிக்கப்படுகின்றது. இங்கு சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளின் உரிமையாளர்களின் கல்வி நிலையானது அதிகமானோர் சாதாரண சித்தியுடனே அதிகமானோர் காணப்படுகின்றனர். அதாவது ஆய்வுக்குட்படுத்திய தொழில் முயற்சிகளின் உரிமையாளர்கள் 67% மானோர் சாதாரண சித்தியிற்குக் குறைவான கல்வித்தரத்தினைக் கொண்டுள்ளனர். மேலும் உயர்தரத்துடனான கல்வி நிலையினைக் கொண்டுள்ள உரிமையாளர்களின் தொழில் முயற்சியானது தொழில்நுட்பத்துடன் சார்ந்தாகக் காணப்படுகின்றது. அதாவது தொலைபேசி விற்பனை மற்றும் திருத்துதல் நிலையம் (Phone Shop) பதிப்பகம் (Printers) போன்ற தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். அதேபோல் SMEs பணிபுரியும் தொழிலாளர்களின் கல்வித்தரத்தினை நோக்கின் 42% மானோர் சாதாரணதரத்துடனான கல்வித்தகமையைக் கொண்டிருப்பதுடன் 25 சதவீதமானோர் பாடசாலைக் கல்வியில் இருந்து இடைவிலகியவர்களாகக் காணப்படுகின்றனர். 23 சதவீதமானோர் உயர்தரச்சித்தியுடன் காணப்படுகின்றனர்.

பிற்செலவு மாதரி 01 கணிப்பீட்டின் படி தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தினை அதிகரிக்க செய்வதில் நிறுவனத்தால் வழங்கப்படும் சம்பளம், சேமிப்பு பழக்கம், நிறுவனத்தின் CSR, SMEs செயற்பாட்டினால் ஏற்பட்ட பிரதேச அபிவிருத்தி என்பன நேர்கணியத்தில் செல்வாக்கு செலுத்துகின்றன. இதனை எளிய இணைவுக் குணகம் (Simple Correlation) R = 0.835 விளக்குவதுடன் $R^2$= 0.698 பெறுமதியானது காட்டுகின்றது. இங்கு தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் பிரதேச அபிவிருத்தி என்பது 80% மான செல்வாக்கு செலுத்துகின்றது. நிறுவனங்கள் தொடர்ச்சியான வளர்ச்சிப் போக்கினை கொண்டதாகக் காணப்படுகின்றன. பொருளாதார ரீதியில் வேலைவாய்ப்பினை வழங்குவதுடன் வறுமையையும் குறைக்கின்றது. எனவே இவ் ஆய்வின் முடிவானது மொத்த ரீதியாக நோக்கும் போது சிறிய, மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் தொழிலாளர்களின் வாழ்கைத்தரத்தினை அதிகரிக்கச் செய்கின்றது.

**உசாத்துணைகள்**


Aruna S. Gamuga (2003), 'Small and Medium Enterprises Development in Srilanka': A Preview, Research Paper, University of Jayewardenepura Colombo.

Central Bank of Sri Lanka(2014,2015),Annual Reports, Central Bank of Sri Lanka

Dasanayake .SWSB (2010), 'Overview of Sri Lankan Small and Medium Scale Enterprises', Online Journal, Vol. 6, Issue 02.

Lalitha Fernando.S (2000), 'Determinants of Public Entrepreneurship in the Sri Lanka Administrative', Amity Business Review, Vol.2 , July- December 2000.




ISBN 978-955-627-120-1

Mayuran.L (2016), ‘Impact of Entrepreneurship Training on performance of Small Enterprises in Jaffna District’, G.J.C.M.P, Vol.5, No.2, pp 1-6.

priyanth. H.M.S (2006), ‘Managerial Deficiencies in the Small and Medium Enterprises in Srilanka’, Sabaragamuwa University journal 2006, Vol.6 no PP99-105.

Satharasinghe .A.J (2015), ‘Key Indicators of Industry Treade and Services Sector Economic Census 2013/14’, Press Release Director News, Department of Census and Statistic Central Bank of srilanka.

Thrikawala.S.S (2011), ‘Impact of Strategic Network for the Success of SME’, in Srilanka, World Journal of Social Sciences, Vol.1, No.2, May 2011,Pp.108-109

Vijayakumar,S(2013), ‘The Status Of Small And Medium Enterprises And Promotions For Their Growth In Srilanaka International Journal on Global Business Management and research, Vol.1, Issue.2, 2013

Vijayakumar. S (2013a), ‘an Empirical Investigation on the Association between Small and Medium Enterprises and the Economic Growth of Srilanka’, Trends Economics and Management, Vol. 7- Issues.

Vijayakumar.S (2013b), ‘Growth and Issues of Small and Medium Enterprises in Post Conflict Jaffna Srilanka’, Economia. Seria Management, Vol.16, Issue 1, 2013.



ISBN 978-955-627-120-1